Lr.No:CRT/MFESTO/2026/001

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் அறிக்கை

## தாம்பரம் மாநகர பகுதி கோரிக்கைகள்

**1) சுற்றுச்சூழல்:**
தாம்பரம் பகுதியில் உள்ள அனைத்து ஏரிகளையும் சாக்கடை கழிவுநீர் மாசிலிருந்து காப்பாற்ற 4D-Deflect, Drain, Desilt & Deepen வழிமுறையை அமல்படுத்தி ஏரிகளை தூர்வாரி ஆழப்படுத்தி அதிக மழை நீர் மட்டும் சேமித்து, ஏரி கரைகளில் நடைபாதை மற்றும் மரக்கன்றுகள் நட்டு புதுப்பிக்க வேண்டும்.

**2) குடிநீர் திட்டம்:**
தாம்பரம் மாநகராட்சிக்கு தினசரி 150MLD புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பாக்டீரியா மாசு இல்லாமல் BIS 10500:2012 தரத்தில் பாதுகாப்பான குடிநீர் 24x7 அனைத்து வீடுகளுக்கும் வழங்க வேண்டும்.

**3) பாதாள சாக்கடை திட்டம்:**
சிட்லபாக்கம், செம்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை, திருநீர்மலை மற்றும் தாம்பரம் எல்லையில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பாதாள சாக்கடை திட்டத்தை உடனடியாக போர்க்கால அடிப்படையில் அமல்படுத்தி தாம்பரம் பகுதியில் உள்ள **ஏரி மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதை தடுக்க வேண்டும்**.

**4) பொது போக்குவரத்து:**
**a) மெட்ரோ திட்ட கோரிக்கைகள்**
நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஜிஎஸ்டி சாலையில் போக்குவரத்து நெரிசலை கட்டுக்குள் கொண்டு காற்று மாசிலிருந்து பகுதிகளை காக்க உடனடியாக இந்த மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

i) **சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் மெட்ரோ** ரயில் திட்டத்தை மத்திய அரசு ஒப்புதல் பெற்று விரைந்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்

ii) **தாம்பரம் முதல் கிண்டி** வரை மெட்ரோ ரயில் திட்டத்தை தாம்பரம் பகுதி கணினி பொறியாளர்கள் நலன் கருதி அவர்கள் எளிதாக ஓஎம்ஆர் சாலை மற்றும் சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள ஐடி நிறுவனங்களுக்கு

செல்வதற்கு ஏதுவாக இந்த மெட்ரோ வழித்தடத்தை உடனடியாக ஒப்புதல் அளித்து செயல்படுத்த வேண்டும்.

iii) மேலும் தாம்பரம் பகுதியில் இருந்து சென்னை விமான நிலையம் மெட்ரோ ரயில் நிலையம் செல்வதற்கு ஏதுவாக **10 நிமிட சிற்றுந்து இணைப்பு சேவையை சிட்லபாக்கம் பகுதி, செம்பாக்கம் பகுதி மற்றும் மாடம்பாக்கம் பகுதியில்** தொடர்ந்து நம்பகத்தன்மையுடன் சிற்றுந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**b) ரயில்வே கோரிக்கைகள்:**
**i) தாம்பரம் மூன்றாவது ரயில் நிலையம்:**
ஆண்டிற்கு 3.4 கோடி துவக்க ரயில் பயணிகள் பயன்படுத்தும் தாம்பரம் ரயில் நிலையத்தில் பல அடிப்படை வசதிகள் இல்லாமல் குறிப்பாக லிப்ட் மற்றும் எஸ்கேலேட்டர் வசதிகள் பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர்.
இந்த ரயில் நிலையத்தின் **மறுசீரமைப்பு பணிகளை ரூபாய் 890 கோடி மதிப்பீட்டில் மத்திய ரயில்வே அமைச்சகம் விரைந்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**ii) தாம்பரத்தில் இருந்து வந்தே பாரத் மற்றும் அமிரித்பாரத் ரயில்கள்:**
பல ஆண்டுகளாக **தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து பெங்களூரு, கோயம்பத்தூர் மற்றும் திருச்செந்தூர்** நகரங்களுக்கு புதிய வந்தே பாரத் ரயில்களை இயக்க வேண்டும் என்று கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.
தாம்பரத்திலிருந்து **தென்காசி பகுதிக்கு அம்ரித்பாரத்** கோரிக்கை வைக்கிறோம்.

**5) மருத்துவம்**
தாம்பரம் பகுதியில் கட்டப்பட்ட மாவட்ட மருத்துவமனைக்கு **போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமித்து பன்நோக்கு மருத்துவமனைமாக தரம் உயர்த்தி** செங்கல்பட்டு மாவட்டத்தில் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் தாம்பரம் பகுதியில் அனைத்து **ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை தாம்பரம் பகுதிக்கு நியமிக்க வேண்டும்.**

**6) கல்வி**
தாம்பரம் பகுதியில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நல்ல **தரமான கல்வி கட்டடங்கள், குறிப்பாக ஸ்மார்ட் கிளாஸ் மற்றும் டிஜிட்டல் நூலகம் வசதியுடன் நவீன கழிப்பறைகளுடன் தரம் உயர்த்த** நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்பவேண்டும்

**7) சொத்து வரி**
தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் சொத்துவரி குறைக்க வேண்டும்

**8) குப்பை மேலாண்மை:**
தினசரி சேகரிக்கப்படும் வீட்டு குப்பைகளை **தானியங்கி குப்பை பிரிக்கும் இயந்திரம் நிறுவி தரம் பிரித்து பொருட்கள் மீட்டு மறுசுழற்சி முறையை அமுல்படுத்த வேண்டும்**. அனைத்து குப்பை சேகரிக்கும் வாகனங்களுக்கும் **GPS கருவி** பொருத்தி கண்காணிக்க வேண்டும்.

**8) சட்டசபை கேள்வி-பதில் :**
தமிழக சட்டசபையில் **சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்வி மற்றும் துறை அமைச்சகத்தின் பதில்களை** நாடாளுமன்றத்தில் உள்ளதுபோல் **தனி இணையதளத்தில்** வெளியிட வேண்டும்.

**9) அரசு செலவு:**
அரசு செலவிடும் **மூலதனம் மற்றும் வருவாய் அனைத்து செலவினங்களிலும் கிராம குறியீடு எண் சேர்க்கப்பட்டு** ஒருங்கிணைந்த ***பொதுவான பில்லிங் மென்பொருள்*** மூலம் இணையத்தில் வெளியிட வேண்டும்.

10) **அறிவியல் - கலை கல்லூரி** தாம்பரம் பகுதியில் நிறுவவேண்டும்.

**நன்றி**
**இப்படிக்கு**
சிட்லபாக்கம் ரைசிங் குழு

தயானந்த் கிருஷ்ணன்
+919790819813